QIAMS
QUAIDE MILLETH INTERNATIONAL ACADEMY OF MEDIA STUDIES
BE SEEN. BE HEARD.

ROJA MUTHIAH RESEARCH LIBRARY

**காயிதேமில்லத் சர்வதேச ஊடக**
**கல்வி அகாடெமி (QIAMS)**
**&**
**ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்**
**(RMRL)**

இணைந்து வழங்கும்

**முனைவர் மார்க்சிய காந்தி**யின்

# "சங்க காலத்தில்..."

சங்க கால தமிழ் சமூகம் குறித்த
மாதாந்திர தொடர் சொற்பொழிவுகள்

முதல் சொற்பொழிவு:
**சங்க கால தமிழ் சமூக அடிப்படைக் கட்டமைப்பு**

நாள்: நவம்பர் 23, சனிக்கிழமை
நேரம்: காலை 11.00 மணி - 12.30 மணி

இடம்: **QIAMS,** 82, ஸ்டெர்லிங் சாலை,
(நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் அருகில், இலயோலா கல்லூரி எதிரில்)

தொலைபேசி: **044 4858 1896**

www.qiams.in

# "சங்க காலத்தில்..."

ஒரு நாகரிக சமுதாயம் என்பது அதன் பன்முகத்தன்மை காரணமாகச் சிறப்புப் பெறுகிறது. உலகின் மிகப்பழைய மொழிகளுள் ஒன்றான தமிழ்மொழி பேசும் இனமக்கள், மிகப்பழைய நாகரிகத்திற்கும் சொந்தக்காரர்கள். மிகச் செழுமைபெற்ற செவ்வியல் இலக்கியங்களை தம் மொழியில் உடையவர்கள். ஈராயிரம் ஆண்டுகட்கும் முன்னரே இலக்கிய செழுமையும் நாகரிகச் செழுமையும் பெற்றிருந்தார்களென்பதற்கு நேரடிச்சான்றாய் விளங்குவன சங்க இலக்கியத் தொகுப்பெனப் பரவலாய் அறியப்பெற்ற சான்றோர் செய்யுட்கள். அவற்றின் வழிநின்று அக்காலத் தமிழ்ச் சமூகத்தை அறிந்து கொள்ளும் முயற்சியே இந்த திங்கட்பொழிவுத் தொடர். அதற்கு அரண் செய்யுமுகமாய்க் கிடைக்கும் தொல்லியல் சான்றுகளும் இணைத்துப் பார்க்கப்பெறும்.

இப்போதைய நிலையில் 5 அல்லது 6 பொழிவுகளாக வடிவமைக்கப் பெறுகிறது. தேவையெனின் ஒன்றிரண்டு சேர்த்துக்கொள்ளவும் பெறலாம்.

---

## முனைவர் மார்க்சிய காந்தி



தமிழ் மற்றும் வரலாற்றில் முதுகலை பட்டம் பெற்றவர். தொல்லியல் மற்றும் கல்வெட்டி யலிலும் முதுகலை பட்டயம் பெற்றவர். சமஸ்கிருதம் கற்றவர். தமிழக வரலாறு, அகழ்வாராய்ச்சி, கல்வெட்டியல் குறித்து பல கட்டுரைகளை புத்தகங்களை எழுதியவர். தமிழ் நாடு அரசு தொல்லியல் துறையில் கல்வெட்டியல், தொல்லியல், அகழ்வாராய்ச்சி ஆகியவற்றில் பல்வேறு நிலைகளில் பணியாற்றியவர்.

---